வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 12-09-2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

**தலைப்புச் செய்திகள் :**

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று, புதுடெல்லியில் ஈரான் அதிபர் திரு. மசூத் பெஷேஷ்கியனை சந்தித்தார்.

இந்தியாவின் 2026 பிரிக்ஸ் தலைமைத்துவத்தின் கீழ், "மீள்திறன், புதுமை, ஒத்துழைப்பு, மற்றும், நிலைத்தன்மைக்காகக் கட்டமைத்தல்" என்ற கருப்பொருளில் நடைபெறுகிறது.

இந்தியாவின் புத்தாக்கத் திறன் மிக விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக, மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் மறைவிற்கு குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முர்மு (9)

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று, புதுடெல்லியில் ஈரான் அதிபர் திரு. மசூத் பெஷேஷ்கியனை சந்தித்தார். நேற்று, அவர் பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள் குறித்து அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். மேலும், பிராந்தியத்தில் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும், கடல் மற்றும் வர்த்தக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், மாலுமிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் தேவை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

பிரிக்ஸ் -1 (15)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, மலேசிய பிரதமர் திரு. அன்வார் இப்ராஹிமுடன், பேச்சுவார்த்தை நடத்தினார். இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியா வந்துள்ள தலைவர்களுடன் பிரதமர் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு கருதப்படுகிறது. தொடர்ந்து, எத்தியோப்பியா பிரதமர் திரு. அபி அஹமது அலியுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தினார். 2 நாள் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாடு, இன்று பிற்பகல் புதுடெல்லியில் தொடங்கியது. இதனையொட்டி அங்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவலர்களும், 20 துணை ராணுவப் படையினரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உச்சிமாநாடு நடைபெறும் பாரத் மண்டபம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 500 க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் இது குறித்த கூடுதல் தகவல்கள்...

பிரிக்ஸ் - 2 (20)

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உலகளாவிய ஆளுகை, பன்முகத்தன்மை, வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்பம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு, சுகாதாரம், பேரிடர் தாங்குதிறன் மற்றும் முக்கிய விநியோகச் சங்கிலிகள் உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உச்சிமாநாடு, இந்தியாவின் 2026 பிரிக்ஸ் தலைமைத்துவத்தின் கீழ், “மீள்திறன், புதுமை, ஒத்துழைப்பு, மற்றும், நிலைத்தன்மைக்காகக் கட்டமைத்தல்” என்ற கருப்பொருளுடன் நடைபெறுகிறது.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங், தென்னாப்பிரிக்க அதிபர் திரு. சிரில் ரமபோசா, எகிப்திய அதிபர் திரு. அப்தெல் ஃபத்தா எல்-சிசி, இந்தோனேசிய அதிபர் திரு. பிரபோவோ சுபியாண்டோ மற்றும் ஈரானிய அதிபர் திரு. மசூத் பெஷெஷ்கியன் உள்ளிட்ட பல முக்கிய உலகத் தலைவர்கள் இந்த உயர்மட்ட உச்சிமாநாட்டில் பங்கேற்கின்றனர். பிரேசில், சீனா, எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேசியா, இந்தியா, ஈரான், ரஷ்யா, சவூதி அரேபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட 11 முக்கிய வளர்ந்து வரும் மற்றும் வளரும் பொருளாதாரங்களை பிரிக்ஸ்

உச்சிமாநாடு ஒன்றிணைக்கிறது. பெலாரஸ், பொலிவியா, கஜகஸ்தான், கியூபா, மலேசியா, நைஜீரியா, தாய்லாந்து, உகாண்டா, உஸ்பெகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய கூட்டாளர் நாடுகளும் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்கின்றன.

**பிரிக்ஸ் - 3 (14)**

உச்சிமாநாட்டின் தொடக்க அமர்வில் உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரிக்ஸ் அமைப்பின் இந்தியத் தலைமைப் பொறுப்பு, மக்கள் நலன் சார்ந்த மற்றும் மனித நேயத்திற்கு முதலிடம் தரும் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது என்று கூறினார். தலைமைப் பொறுப்பில், மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நீடித்த நிலைத்தன்மை ஆகியவை இந்தியாவின் முதன்மையான முன்னுரிமைகளாக இருந்து வருகின்றன என்று அவர் குறிப்பிட்டார். இந்த முன்னுரிமைகளின் வழிகாட்டுதலின்படி, பிரிக்ஸ் ஒத்துழைப்பை சாமானிய மக்களுடன் நேரடியாக இணைப்பதில் இந்தியா சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார். இந்த தொலைநோக்குப் பார்வையுடன், 350-க்கும் மேற்பட்ட கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், நாட்டின் சுமார் 30 நகரங்களில் இருந்து தூதுக்குழுக்களை வரவேற்கும் பாக்கியம் இந்தியாவிற்கு கிடைத்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

**மன்சுக் மாண்டவியா (9)**

நாட்டின் வளர்ச்சியில் தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக, மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். மும்பையில் தொடங்கிய கட்டுமான தொழிலாளர்களின் 2 நாள் தேசிய மாநாட்டில் பேசிய அவர், தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதில், மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தொழிலாளர் நலனுக்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டா ா . தொழிலாளர் நலனுக்கான நிதியை மாநில அரசுகள் முழுமையாக செலவிட வேண்டும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தினார்.

**ஓய்வூதியம் (9)**

பிரதமரின் விவசாயிகளுக்கான ஓய்வூதிய திட்டத்தின் கீழ், இதுவரை 24 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. இந்தத் திட்டம் இன்று, 7ஆவது ஆண்டில் அடியெடுத்து

வைத்துள்ளதை அடுத்து, மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஹரியானா முதலிடத்தில் உள்ளது என்றும், இம்மாநிலத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 60 வயதுக்கு மேற்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மாதந்தோறும் குறைந்தது மூவாயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரல்ஹாத் ஜோஷி (8)

இந்தியாவின் புத்தாக்கத் திறன் மிக விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக, மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில், அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, புதுடெல்லியில் நடைபெறும் பாரத் புத்தாக்க கண்காட்சி, உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாக கூறியுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குத் திட்டங்களால் உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் இளம் புத்தாக்கத் திறனை சர்வதேச அரங்கிற்கு கொண்டுசெல்வதாகவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

சாலமன் பாப்பையா (8)

முதுபெரும் தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் மறைவிற்கு குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் பட்டிமன்ற மரபின் வழியாக தமிழ்மொழியின் செழுமையை எண்ணற்ற இல்லங்களுக்கு கொண்டு சென்றவர் சாலமன் பாப்பையா என்று புகழாரம் சூட்டியுள்ளார். தமிழ்மொழி, இலக்கியம், மற்றும் பண்பாட்டிற்காக அவர் ஆற்றிய பணி என்றென்றும் நினைவு கூரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காஞ்சி மாமுனிவர் -1 (6)

புதுச்சேரி லாஸ்பேட்டையில் இயங்கி வரும் காஞ்சி மாமுனிவர் அரசினர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மைய, வளாகத்தை சுற்றி இயக்குநர் டாக்டர் சசிகாந்த தாஸ், மரங்கள், பூச் செடிகளை நட்டு தோட்டம் அமைத்து பராமரித்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக இன்று 150 முருங்கை மரங்களை நட்டு அதனை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இது குறித்த கூடுதல் தகவல்கள்...

காஞ்சி மாமுனிவர் - 2 (10)

இயக்குநர் டாக்டர் சசிகாந்த தாஸ் மேலும் கூறுகையில், இந்த முருங்கை மரங்கள் நன்கு வளர்ந்த பிறகு அதில் இருந்து இலைகளை எடுத்து ஆயுஷ் மருத்துவர்கள் உதவியுடன் பவுடராக மாற்றி பின்னர் மாத்திரை வடிவில் மாணவர்களுக்கு வழங்க உள்ளதாகவும். இதனால் கல்லூரியில் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க முடியும் என அவர் தெரிவித்தார். ஆரோக்கியமான சமுதாயம் வேண்டும் என்றால் அதற்கு ஆரோக்கியமான மாணவர்கள் வேண்டும். எனவே கல்லூரியில் இந்த மாத்திரைகளை தயாரித்து எங்கள் கல்லூரி மாணவர்களுக்கும், இதர கல்லூரி மாணவர்களுக்கும் வழங்க உள்ளதாக தெரிவித்தார்.

யூத புத்தாண்டு (7)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, யூதப் புத்தாண்டான ரோஷ் ஹஷானாவை முன்னிட்டு, இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேல் மக்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள யூத சமூகத்தினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சமூக ஊடகப் பதிவு ஒன்றில், அனைவருக்கும் அமைதி, நல்ல ஆரோக்கியம் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் நிறைந்த ஒரு புத்தாண்டு அமைய வேண்டும் என பிரதமர் திரு. மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விமான சேவை (13)

சீனாவின் குவாங்சோவிற்கும் - புதுடெல்லிக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகளை இந்த மாதம் 21 ஆம் தேதி முதல் மீண்டும் தொடங்கவுள்ளதாக சைனா சதர்ன் ஏர்லைன்ஸ் இன்று அறிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் கோவிட்-19 பெருந்தொற்று தொடங்கிய பிறகு, இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் இடையிலான விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்காக சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங் இந்தியாவுக்கு வருகை தந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தும் வேளையில், இந்த பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கியுள்ளன.

இந்த ஆண்டு மார்ச் மாதம், இந்திய விமான நிறுவனமான இண்டிகோவும் ஷாங்காய் மற்றும் கொல்கத்தா இடையே தினசரி விமான

சேவைகளைத் தொடங்கியது. இதன் மூலம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து மேலும் விரிவடைந்துள்ளது.

**விளையாட்டு (6)**

**கிரிக்கெட்**

இந்தியா – A – ஆஸ்திரேலியா – A அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி, இன்று சண்டிகரில் நடைபெறுகிறது.

**டென்னிஸ்**

பாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் கரண்சிங் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளார். ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 7-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **திக்விஜய் பிரதாப்சிங்**கை வென்றார்.

**வானிலை (6)**

தெற்கு கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை தமிழகப் பகுதிகள் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால், இன்றுமுதல், அடுத்த 4 நாட்களுக்கு மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், புதுச்சேரி – காரைக்கால் ஆகிய பகுதிகளில், இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று, புதுடெல்லியில் ஈரான் அதிபர் திரு. மசூத் பெஷேஷ்கியனை சந்தித்தார்.

இந்தியாவின் 2026 பிரிக்ஸ் தலைமைத்துவத்தின் கீழ், “மீள்திறன், புதுமை, ஒத்துழைப்பு, மற்றும், நிலைத்தன்மைக்காகக் கட்டமைத்தல்” என்ற கருப்பொருளில் நடைபெறுகிறது.

இந்தியாவின் புத்தாக்கத் திறன் மிக விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக, மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் மறைவிற்கு குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.